RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt2224s2031

# வேரில்லாத மரங்கள் புதினத்தில், குடும்ப உறவுகள்

ர. செல்வலதா [அ, *]

[அ] தமிழ்த்துறை, ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி-628002, தமிழ்நாடு, இந்தியா.

# Family Relationships in the Novel “Verilla Marangal (Rootless Trees)”

R. Selva Latha [a, *]

[a] Department of Tamil, A.P.C. Mahalakshmi College for Women, Thoothukudi-628002, Tamil Nadu, India

* Corresponding Author: selvalatha@apcmcollege.ac.in

Received: 27-06-2022
Revised: 12-09-2022
Accepted: 03-10-2022
Published: 05-11-2022

Check for updates

## ABSTRACT

In the social system, man's way of life has to go through an important phase at every stage, from birth to death. In that case, the "feeling of love" that appears in adolescence is not limited to both men and women. As it moves toward marriage, the two families move towards the relationships they belong to and become central. Writer Sivasankari's novel "Verilla Marangal -Rootless Trees" can gauge whether love succeeds or fails in the differences found in family attitudes, customs, religion, caste, rituals, and economic status.

**Keywords:** Verilla Marangal, Rootless Trees, Relationships, Family, Novel

## முன்னுரை

ஆண் - பெண் பாலினப் பாகுபாடு ஈர்ப்புடையது என்பர். அதை இனக்கவர்ச்சி என்கிறோம். இது எல்லா மனிதருக்கும் இயல்பாக இளம்பருவத்தில் உடல், மனஅளவில் ஏற்படக்கூடியதுதான். சிலர் அதைப் புதைத்தும், சிலர் அதன் வழியிலும் செல்கின்றனர். இப்புதினத்தில் இருவேறு மதம்சார்ந்த மாதவனும், வசந்தாவும் காதல் கொள்கின்றனர். இருவருமே தன்வீட்டைவிட்டு வந்து நண்பர்கள் முன்னிலையில் திருமணம் செய்து கொண்டு தனியாக குடும்ப வாழ்க்கையை துவக்குகின்றனர். இக்குடும்ப வாழ்வில் அவர்கள் சார்ந்த உறவுகள் இணையும்போது மத அடிப்படையில் என்னென்ன பிரச்சனைகள் ஏற்படுகிறது என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்

## ஆய்வு அணுகுமுறை

வேரில்லா மரங்கள் புதினத்தில், காதலில் தொடங்கி திருமணத்தில் இணைந்து குடும்ப வாழ்க்கை மகிழ்வாக அமையும்போது ஒவ்வொரு நாளும் நிகழும் நிகழ்வின் அடிப்படையில், உறவுமுறைகளில் ஏற்படும் பிரச்சனைகள் வளர்ந்து கொண்டே செல்கிறது. பிரச்சனைக்கான காரணம் கண்டு அதைத் தீர்ப்பதற்குரிய வழிமுறைகள் “சமுதாய அணுகுமுறை” கொண்டு ஆராயப்பட்டுள்ளது. “இலக்கியம் ஒரு குறிப்பிட்ட மனிதனின் படைப்பல்ல ஒரு குறிப்பிட்ட இடச்சூழலிலும் காலச்சூழலிலும் வாழும் சமுதாயத்தில் சிறப்பான பங்குபெறும் ஓர் ஆசிரியரின் படைப்பு. இலக்கியத்தை அணுகுகின்றபோது அவ்விலக்கியம் தோன்றிய சமுதாயச் சூழ்நிலையையும் காலச்சூழ்நிலையையும் கருத்தில்கொண்டு, இலக்கிய ஆசிரியன் எந்த அளவுக்கு எந்த வகையில் தன்சமகாலச் சமுதாயத்தை அதன் எண்ணங்களை வெளிப்படுத்துகிறான் எனக் காண்பதே சமுதாயவியல் அணுகுமுறை” என்று

பேராசிரியர் சமுதாயவியல் அணுகுமுறையை விளக்குகிறார் (Balamurugan, 1983). தனிநபரும், குடும்பமும் சமுதாயத்தின் உள்ளடக்கம் என்பதால் இவ்வணுகுமுறை பயன்படுத்தப்பட்டுள்ளது.

## உறவுமுறைகள்

மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல. ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார் என்று இறைவன் ஆணுக்குத் துணையாகப் பெண்ணை உருவாக்கினார் என்று விவிலியம் கூறுகிறது. ஆண் - பெண் இணைந்த உறவுநிலையில் இருந்துதான் பல உறவுமுறைகள் தோற்றம் கொள்கின்றன. தாய் - தந்தை, மகன் - மகள், தாத்தா - பாட்டி, பேரன் - பேத்தி, அத்தை - மாமா மற்றும் பல உறவுகள் மரத்தின் கிளைபோன்று தோன்றுகின்றன. சமுதாய உறவுநிலையில் நண்பன் - தோழி, காதலன் - காதலி போன்று பல உறவு முறைகள் விரிவடைகின்றன. உறவுகளின்றி மனிதன் தனித்து வாழ முடியாது. அவ்வாறு வாழும்போது மன அழுத்தத்திற்கு உள்ளாகின்றான் மகிழ்ச்சியை இழக்கின்றான் (Balamurugan, 1983).

## மாதவனின் குடும்பச்சூழல்

அப்பா, அம்மா, ஆயா என்று சிறுகுடும்ப அமைப்பில் காஞ்சிபுரத்தில் மகிழ்ச்சியாக வாழ்ந்த மாதவன், எம்.ஏ. படிப்பதற்கும் பின் பாங்க வேலைக்குமாக மெட்ராஸில் லாட்ஜில் தங்கியிருக்கிறான். சைவம் மட்டும் எடுத்துக்கொள்ளும் ஆச்சாரமான இந்து குடும்ப அமைப்பில் தேவாரம், திருவாசகப் பாடல்களைப் பாடும் ஒழுக்கத்துடன் வளர்க்கப்படுகிறான்.

## ஆயா கற்றுக்கொடுத்த பழக்க - வழக்கங்கள்

முன்பெல்லாம் வீடுகளில் தாத்தா, பாட்டி என்று பெரியவர்களோடும், அவர்கள் கற்றுத்தரும் ஒழுக்கத்துடனும் இளைய தலைமுறையினர் வளர்க்கப்பட்டனர். ஆனால், இன்றைய காலத்தில் அச்சூழ்நிலை இல்லாத காரணத்தால் இளையவர்களின் வாழ்க்கை திசைமாறி சமூகச் சீர்கேட்டிற்கு வழிவகுப்பதை அறியமுடிகிறது.

“காலையில் எழுந்ததும் உள்ளங்கைகளைத் தேய்த்து, கண்களில் ஒற்றி பிறகு விழிகளைத் திறக்கின்றான். பொழுது நல்லபடியா போகனும்னு வேண்டிக்கிட்டு உள்ளங்கைய பாத்தம்னா நாள்பூரா லட்சுமி சரஸ்வதியோட கடாட்சம் இருக்கும்னு சொல்வாங்க” என்று ஆயா பழகிக்கொடுத்த பழக்கம் இன்றுவரை மாதவனுக்குத் தொடர்கிறது (Sivasankari Singh, 1995). காலை கண்விழித்த உடன் கடவுளுக்கு நன்றி கூற வேண்டும். ஒரு புதுநாளை இறைவன் நமக்கு அருளியிருக்கிறார். எத்தனையோ பேர் தூக்கத்திலேயே உயிரிழப்பதை நாம் அறிகிறோம். “பொழுது விடிஞ்சு தூங்கினா வீட்டுல தரித்திரம் தாண்டவமாடும்…எந்திரி ராஜா மொகத்த கழுவிகிட்டு, படிக்க உக்காரு… என் தங்கமல்ல” என்று ஆயா, காலையில் எழும்பும் நல்லபழக்கத்தை உருவாக்கினாள். இந்த காலத்தில் இப்படிக்கூற பெரியவர்கள் வீட்டில் இல்லாத காரணத்தால் 9, 10 மணிக்கு மேலும் ஆண், பெண் பிள்ளைகள் படுக்கையை விட்டு எழுந்திராமல் பகல் பொழுதை வீணாக்குவதைப் பார்க்க முடிகிறது. “சிரிக்க சிரிக்கத்தான் ஆயுசு கூடும்னு எங்க ஆயா சொல்வாங்க” என்று மாதவன் கூறுகிறான். வாய்விட்டு சிரித்தால் நோய்விட்டுப் போகும். குடும்பத்திற்குப் பெரியவர்கள் கூறும் அனுபவ வார்த்தைகளை இளம்தலைமுறையினர் கேட்டு பின்பற்றுவது நல்லது (Sivasankari Singh, 1995).

## வசந்தாவின் குடும்பச்சூழல்

தாய், தகப்பன் இல்லாத கிறிஸ்தவ மதம் சார்ந்த வசந்தாவிற்கு அத்தம்மா, அண்ணன் தாஸ், அவன் மனைவி மற்றும் 2 பிள்ளைகள் மட்டுமே உறவுகள், டிராவல் ஏஜென்சியில் வேலை பார்க்கிறாள். அத்தம்மா காலை, மாலை பீடத்துக்கு ரோஜாப்பூ போட்டு மெழுகுவர்த்தி ஏற்றி

வழிபடுவாள். அத்தம்மாவின் ஆதரவு வசந்தாவிற்கு உண்டு, "வெள்ளைப் புடவையில், ஸ்லீவ்லெஸ் ரவிக்கையில் ஒரு இளவரசி மாதிரி தோன்றியவள் சட்டென்று திரும்பியதில் இருவர் பார்வையும் சந்தித்தபோது" மாதவனும், வசந்தாவும் இச்சந்திப்பிற்கு பின் பல நாள்கள் பல்வேறு இடங்களில் தங்கள் காதல் உணர்வைப் பகிர்ந்து கொண்டனர் (Sivasankari Singh, 1995).

"ஒரு வேளை எங்க வீட்டுல உன்னை ஏத்துக்க சம்மதிச்சாங்கன்னா, நீ மதம் மாற தயாரா வசந்தா.?. நீங்க நீங்களா இருங்க நா நானா இருக்கேன். அன்பு இருக்கறப்போ மதம் மாற வேண்டிய அவசியம் இருக்கிறதா நா நினைக்கல... ஒருத்தர் மதம், பழக்க வழக்கத்த மற்றவர் மதிக்க கத்துகிட்டாபோதும்" என்று வசந்தா கூறுகிறாள் (Sivasankari Singh, 1995). அவரவர் மதத்தின்படி அவரவர் நடந்துகொள்ள வேண்டும். மதமாற்றம் தேவையில்லை என்று ஆரம்பத்தில் நினைக்கின்றனர். "கடவுள் ஒருவரே, பாதைகள் தாம் பல என்று உபநிடதம் தெளிவுபடுத்துகிறது."

"அன்பு சிவம் இரண்டென்பர் அறிவிலார்

அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்"

கடவுளுக்காக மனிதர்கள் துன்புறும் அவலநிலை கண்டபோதுதான் சமயச் சான்றோர்கள் அன்புதான் கடவுள் என்று அறிவித்தார்கள் (Thirugnana Sambandam, 2005).

## திருமண வாழ்க்கை

காதலர்கள் திருமணம் செய்ய விரும்பும்போது பெற்றோரிடம் கூறி அவர்களின் ஆசியுடன் நடப்பது ஒருவகை. பெற்றோர்,உறவினர் மறுத்தால் தானாக சென்று திருமணம் செய்வது 2ஆம் வகை. 2ஆம்வகை திருமணம்தான் மாதவன் - வசந்தாவிற்கு நடந்தது. "பதிவுத் திருமண அலுவலகத்தில் தங்கள் திருமணத்தைப் பதிவுசெய்து கொண்டபின் 'ஓம்' மோதிரத்தை வசந்தா மாதவனுக்கும், சிலுவை மோதிரத்தை அவன் அவளுக்கு அணிவிக்க கூட இருந்த நண்பர்கள் கங்க்ராட்ஸ் என்று வாழ்த்த வேறு எந்த சடங்குகளும் இன்றி தம்பதியானார்கள்" இருவரும் குடும்பத்தைப் பிரிந்து தனிக்குடும்பம் ஆரம்பித்தனர்.

"அவற்றுள்

உடன்போய் வரைதல் ஒருவகைத்து ஆகும்"

தலைவன் பிறர் அறியாதபடி தலைவியை அழைத்துக்கொண்டு திருமணம் செய்து கொள்வான். இது உடன்போய் வரைதலாகும் என்று அகப்பொருள் விளக்கம் தருகிறது. சங்ககால வாழ்க்கை முறையின் நிகழ்வு இன்றும் தொடர்வதை அறியமுடிகிறது (Sivasankari Singh, 1995).

## தொடரும் சண்டைகள்

இருவரும் இரண்டு வருடம் ஃப்ரீயாக இருக்க வேண்டும். பிறகு குழந்தை பெற்றுக்கொள்ளலாம் என்று முடிவெடுத்தும், வசந்தா கர்ப்பமாகிறாள். "நாளாக ஆக அபார்ஷன் செய்யறது ரொம்ப சிரமமாயிடும் வசு புரியாம கோணவாதம் பண்ணாத" என்றவுடன் "ஏன்னா.. அது பாவச் செயல்..மனுஷனா பிறந்தயாரும் செய்யக்கூடாத காரியம்.. எங்க மதம் சொல்லுது என்று மறுக்கிறாள்" வசந்தா (வே.மர.ப.106) சமுதாயத்தில் பலருடைய திருமணவாழ்க்கை குழந்தை இல்லாத காரணத்தால் கேள்விக்குறியாக நிற்கிறது. எத்தனையோ பேருக்கு இல்லாத பாக்கியத்தை இறைவன் கொடுக்கும்போது அதை அழிக்க நினைப்பது குற்றமாகக் கருதப்படுகிறது. "இந்தியாவில் பாதுகாப்பற்ற கருகலைப்புகளால் ஒவ்வொரு நாளும் 13 பெண்கள் இறக்கின்றனர். ஒவ்வொரு ஆண்டும் 64 லட்சம் கர்ப்பங்கள் கலைக்கப்படுகின்றன. 2007 முதல் 2011ம் ஆண்டில் இந்தியாவில் நடந்ததில் 67% கருக்கலைப்புகள் பாதுகாப்பற்றவை என வகைப்படுத்தப்பட்டு உள்ளன" பாதுகாப்பற்ற கருக்கலைப்பை தவிர்க்க வேண்டும் (Sivasankari Singh, 1995).

## மதம் சார்ந்த சடங்குமுறைகளில் போட்டிகள்

பேரன் பிறந்திருக்கிறான் என்று கூறியவுடன் “அம்மாவ அழைச்சிட்டுப் போயேன் நா அடுத்தவாரம் தொட்டிலுக்கு வந்துக்கறேன்னு எழுதியிருக்காரு, அம்மாவுக்குப் பேரனப் பாத்தே ஆகணுமாம்” அம்மா வருவதை சிறுவீட்டைக் காரணம்காட்டி தடுக்கிறாள் வசந்தா. இருவருக்கும் சண்டை வருகிறது. “பதினாறாவது நாள்தான் தொட்டில் போடுவாங்க, அன்னிக்குத்தான் வருவாங்க... பதினாறாவது நாளா? அத்தம்மா நேத்துதான் சொல்லிக்கிட்டிருந்தாங்க பதினாறாவது நாள் சர்ச்சுக்கு எடுத்திட்டுப்போய் ஞானஸ்நானம் செய்யணும்னிட்டு” இருவருக்கும் மதம் சார்ந்த சடங்கு முறைகளைச் செய்வதில் சண்டை வருகிறது. “மனைவிக்கும் கணவனுக்கும் இடையில் ஏதோ மனக்கசப்பு வரல் இயற்கை”5 என்பது பாரதிதாசனின் பாடல் வரி, குடும்பம் என்று இருந்தால் சண்டை வருவது இயற்கை. அதன் காரணம் அறிந்து யாராவது ஒருவர் விட்டுக்கொடுத்து சமாதானமாகி விடவேண்டும் (Kalpadasan, 2009).

## தாயின் இழப்பு

“உறக்கத்திலேயே அம்மா போய் விட்டார் என்கிற சேதி தலையில் இடியாக வந்திறங்கின” குழந்தையை அம்மாவின் கையில் ஆசைதீர கொஞ்சும்மா என்று சொல்லியிருக்கலாமே. அம்மா என்னென்ன ஆசைபட்டாள் என்று அழுது புரண்டான் மாதவன். இருக்கும்போது அன்பைப் பகிர்வதை விட்டுவிட்டு இல்லாதபோது ஏங்கிப் பயனில்லை (Sivasankari Singh, 1995).

## தந்தையின் நிலை

தாயை இழந்த நிலையில் தந்தை தனிமையில் ஊரில் வாழ்ந்தார். தன் தந்தையை சந்தோஷமாக வைத்துக்கொள்ள விரும்பிய மாதவன், அவரைத் தன்னுடன் வைத்துக் கொண்டான்”. “மாமா வாசப்பக்கத்தோடுதான் - தன் அறை - தன் சாமி - பூஜை - திருவாசகம் - திருப்புகழ் என்று இருக்கிறார் என்றால், பழைய சின்ன வீட்டில் சமையலறையிலேயே ஏசுநாதர் படத்தை மாட்டி பீடத்தில் விளக்கேற்றி அத்தம்மா தோத்திரம் சொல்ல நேர்ந்ததைப் பார்த்து முகம் சுளித்தான் மாதவன்”. அப்பாவிற்கும், அத்தம்மாவிற்கும் இடையில் சாப்பாட்டு முறைகளில், வழிபாடுகளில் மனம் ஒப்பாமல் சிறுசிறு சண்டைகள் ஏற்பட்டன (Sivasankari Singh, 1995).

## குழந்தை வளர்ப்பில் குழறுபடிகள்

குலப்பெயர்களை தவிர்த்து ‘ராஜா’ என்று தன்மகனுக்கு பெயர் சூட்டினார்கள். “ஏன் யோசிக்கிறீங்க? நம்ம ஊருல முக்கால்வாசிபேர் புருஷன் வீட்டுக்குப் போய் அவங்க பழக்க வழக்கங்களத்தான் அனுசரிக்கிறாங்க. அதனால் மிஸ்டர் மாதவனோட ரிலிஜன் அதாவது ஹிந்து’னு போட்டுடட்டுமா?” என்று பள்ளியில் சேர்க்கும்போது முதல்வர் கேட்க, வசந்தா குறுக்கிட்டு கிறிஸ்தவ மதம்னே எழுதலாமே? அத எழுதினா என்ன? என்று இருவரும் சண்டையிட்டனர். வேற்று மதம், சாதியில் நடைபெறும் திருமணங்களில் இத்தகைய குழப்பங்கள் ஏற்படுகின்றன. குடும்ப உறவுகளில் ஏற்படும் சண்டைகளால், ராஜாவின் வளர்ப்பு முறைகளில் மாற்றம் ஏற்பட்டது (Sivasankari Singh, 1995).

கையில் புகையும் சிகரெட்டுடன் பத்து வயசுப் பிள்ளை, பள்ளிக் கூடத்துக்கு மட்டம் அடித்துவிட்டு ஸினிமா தியேட்டர் வாசலில்” என்று பக்கத்துவீட்டு எழுத்தாளர் மாதவன் வேதனைப்பட்டார் (Sivasankari Singh, 1995). இன்றைய சமூகத்தில் இளம்வயதுடைய மாணவர்கள் பலதவறுகளில் ஈடுபட்டு குற்றவாளியாக பிடிக்கப்படும் போது குடும்பப் பின்னணியை ஆராய்ந்தால் தாய், தந்தை சரியில்லாத நிலை உள்ளதை அறிய முடிகிறது. அவர்கள் செய்யும் தவறுக்குப் பெற்றோர் காரணமாகின்றனர். “ராஜா நாலைஞ்சு நாளாகவே ராத்திரி சரியா சாப்பிடல வயித்துப் பிரட்டுது தலை வலிக்குன்னு ஏதேதோ நொண்டி காரணங்களைச் சொல்கிறான் வசு” என்றால் அத்தம்மா (Sivasankari Singh,

1995). அவனை மருத்துவரிடம் அழைத்துச் செல்லாமல் அத்தம்மா 'புனித சப்பாத்தி நீரை' வாங்கிட்டு வந்து கொடுத்தாள். தாத்தா 'கறுப்பு கயிற்றில் கோக்கப்பட்டிருந்த தாயத்தை வலக்கையில் கட்டினார்". ராஜா மஞ்சள் காமாலையால் பாதிக்கப்பட்டிருப்பது தெரியாமல் மதச் சடங்கு முறைகளைக் கையாண்டனர்

## மாதவனின் அறிவுறுத்தல்

ராஜா இறந்துபோனான் என்ற செய்திகேட்ட, பக்கத்து வீட்டு மாதவன், "கிறிஸ்தவ முறைப்படி புதைக்கப் போறிங்களா, இல்ல ஹிந்து தர்மப்படி செய்யப்போறிங்களா. இந்த ஒருமுறையாவது சண்டை இல்லாம ஒரு முடிவுக்கு வந்தீங்கன்னா ராஜாவோட ஆத்மாவுக்கு அது நிம்மதி தர்ற செயலா இருக்கும்" என்று அவன் நெற்றியில் முத்தமிட்டுச் சென்றார் (Sivasankari Singh, 1995). பெரியவங்க இளைய தலைமுறைக்கு வழிக்காட்டியா நடந்துக்கனுமே தவிர அவங்க சீரழிக்கும், அழிவுக்கும் காரணமாயிடக்கூடாது. எல்லாவற்றையும் விட மனிதாபிமானம் நிறைந்த மனுஷனா இருக்கிறது முக்கியம் (Dinakaran, 2022).

## முடிவுரை

மனித உறவு என்பது தேவையானா ஒன்றாகும். தனிமனிதனின் சிந்தனைப் பதிவு செயல்பாட்டிற்கு உறவு முக்கியம் தேவை. இளம்பருவத்தில் தோன்றும் காதல் உறவு கண்மூடித்தனமாக இருக்கக்கூடாது. காதல் வயப்படும் அதே நேரத்தில் இதனால் நம் குடும்பம், உறவுமுறைகள் பாதிக்கப்படுமா? காதலை குடும்பத்தினர் ஏற்றுக் கொள்வார்களா என அறிந்தபின் சாதகமான சூழ்நிலையில் தொடரலாம். இல்லையென்றால் முளையிலேயே கிள்ளி எறிந்து விடவேண்டும். வேறு வேறு சாதி ,மதம் என்றால் பிரச்சனை வரும் என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும். அதையும் மீறி திருமண உறவில் இணைந்தால் உறவில் விரிசல் வராதபடி விட்டுக்கொடுத்து வாழப் பழகிக் கொள்ளவேண்டும். மதநோய் வயப்பட்டால், மனிதாபிமானத்தை இழக்க நேரிடும். இந்த வேர்பூச்சி அவர்களோடு நில்லாமல் உறவுகளையும் பாதித்து எல்லாரையும் 'வேரில்லாத மரங்களாக' ஆக்கிவிடும். மதம் மனதிற்குள் இருக்கட்டும். மானிடத்திற்குள் வேண்டாம். குடும்பப் பெரியவர்கள், இளையோருக்கு வழிகாட்டியாக அறிவுரை கூறி அன்பால் அணைத்தால், இளம்தலைமுறையினரின் வாழ்க்கை சமுதாயத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதை இவ்வாய்வு முடிவுகளாகக் கொள்கிறது.

## References

Balamurugan, P.N. (1983) T.K.C. in Thiranaaivu Pokku, Thirumozhi Pathippagam, Chennai, India.

Dinakaran, (2022) Kadavul Paathi Manithan Paathi, Dailynews paper, Chennai, India.

Kalpadasan, (2009) Bharathidasan Padalkal, Paavai Pathippagam, Chennai, India.

Sivasankari Song, (1995) Verillatha Marangal, Gangai Puthaga Nilaiyam, Chennai, India.

Thirugnana Sambandam, S. (2005) Agaporul Vilakkam, Kathir Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License